**செ.வெ.எண் : 43 /ஜூலை** **நாள் : 20.07.2017**

# இராமநாதபுரம் மாவட்டம்

## பாக் நீரிணை பகுதி மாவட்ட மீனவர்களுக்கு, தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடி கலனை 70 விழுக்காடு மானியத்தில் கட்டுவதற்கான திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசு, அண்மைக்கடல் பகுதியில் அதிகரித்து வரும் மீன்பிடி அழுத்தத்தை குறைத்திடவும், ஆழ் கடல் பகுதியில் செறிந்துள்ள மீன்வள ஆதாரங்களை முறையாக பயன்படுத்தவும், தூண்டில் மற்றும் செவுள் வலை மூலம் சூரை மீன்பிடிப்பதற்கு ஏதுவாக மீனவர்கள் புதிய மீன்பிடி விசைப்படகுகளாக கட்டுவதற்கான புதிய திட்டத்தினை பாக் நீரிணை பகுதி மாவட்ட மீனவர்களின் நலனுக்காக செயல்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடி விசைப்படகினை அதிக பட்சம் ரூ.80/-இலட்சம் செலவில் கட்டிட 70% மானியம் மத்திய - மாநில அரசு வழங்கும். மத்திய அரசு மானியம் 50 விழுக்காடு ரூ.40 இலட்சம், மாநில அரசு மானியம் 20 விழுக்காடு ரூ.16 இலட்சம் வங்கி/நிறுவன நிதி உதவி 20 விழுக்காடு ரூ.16 இலட்சம் பயனாளி பங்கு தொகை 10 விழுக்காடு ரூ.8 இலட்சம் ஆகும். மானியமானது கட்டுமான நிலைக்கேற்ப மூன்று கட்டமாக வழங்கப்படும்.

பாக் நீரிணை பகுதியைச் சார்ந்த முழு நேர மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு அதிகபட்சம் 6 பேர் கொண்ட குழுவாகவோ அல்லது தனிநபராகவோ இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

இந்த திட்டத்தில் பாக் நீரினை பகுதியில் இலங்கை அரசால் சிறைபிடிக்கப்படடு இலங்கையில் தற்சமயம் உள்ள படகுகள், படகுகளை மீட்க முடியாமல் உடைந்த படகுகள், இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டு அதன் பிறகு விடுவிக்கப்பட்ட படகுகள், கூட்டு உரிமையாளர்களின் இழுவலைப்படகுகளை மாற்ற சம்மதிப்பவர் மற்றும் தனிநபர் இழுவலைப்படகினை மாற்ற சம்மதிப்பவர்கள் பயன் பெறுவர். மானியம் பெற பயனாளி தனது இழு வலை படகினை உடைக்க அல்லது பாக் நீரினை பகுதியை தவிர்த்து இதர பகுதிகளுக்கு விற்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவங்களை மீன்வளத்துறையின் இணையதளமான www.fisheries.tn.gov.in லிருந்து கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது விண்ணப்ப படிவங்களை சம்பந்தப்பட்ட மீன்துறை அலுவலகங்களில் நேரில் விலையின்றி பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை மீன்துறை கூடுதல் இயக்குநர் ஒருங்கிணைந்த மீன்வளத்துறை அலுவலக கட்டிடங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் , இராமநாதபுரம் என்ற முகவரிக்கு பதிவு / விரைவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிடையாகவோ ஆகஸ்ட் 7 ம் தேதி திங்கள் பிற்பகல் 5.00 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். விபரங்கள் பெற தொலைபேசி எண் 04567 -231402 ல் தொடர்பு கொள்ளலாம்

மேலும், இத்திட்டம் தொடர்பான கூடுதல் விபரங்கள் மற்றும் தெளிவுரைகளுக்கு சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**